## <u>சுருக்கம்</u>

ஆதிதிராவிடர் நலம் – தாட்கோ – ஆதிதிராவிடர் விவசாயிகள் தாட்கோ மூலம் தேசிய ஆதிதிராவிடர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தில் பெற்றுள்ள விவசாயக் கடன்கள் தள்ளுபடி செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

### <u>ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (சிஉதி2) துறை</u>

அரசு ஆணை (நிலை) எண். 130 நாள். 24.11.2008

படிக்கப்பட்டது:

மேலாண்மை இயக்குநர், தாட்கோ கடித எண். DA(R)/7530/2006, நாள். 29.7.2008.

–––––––

<u>**ஆணை:**</u>

2008–09ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் ஆதிதிராவிடர் விவசாயிகள் தாட்கோ மூலம் தேசிய ஆதிதிராவிடர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தில் பெற்றுள்ள விவசாயக் கடன் முழுவதும் தள்ளுபடி செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

2. இந்த அறிவிப்பிற்கிணங்க, 31.3.2006 வரை அனைத்து ஆதிதிராவிடர் விவசாயிகளுக்கும் தாட்கோ நிறுவனம் வழியாக தேசிய ஆதிதிராவிடர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்திலிருந்து வங்கிகள் மூலம் வழங்கப்பட்டுள்ள கடன் தொகையை தள்ளுபடி செய்யக்கோரும் செயற்குறிப்பை தாட்கோ மேலாண்மை இயக்குநர் அரசுக்கு அனுப்பியிருந்தார். அச்செயற்குறிப்பு அரசால் பரிசீலிக்கப்பட்டது. தாட்கோ மேலாண்மை இயக்குநரின் செயற்குறிப்பில் 31.3.2006 வரையில் வழங்கப்பட்டுள்ள என்.எஸ்.எப்.டி.சி. பருவக்கடன் அசல் ரூ.3.47 கோடியும் மற்றும் என்.எஸ்.எப்.டி.சி. பருவக்கடனுக்காக வட்டி ரூ. 0.60 கோடியும் சேர்த்து ஆக மொத்தம் ரூ. 4.07 கோடிக்கான (ரூபாய் நான்கு கோடியே ஏழு இலட்சம் மட்டும்) விவசாயக்கடன் தொகை முழுவதும் தள்ளுபடி செய்து அரசு ஆணையிடுகிறது.

3. இந்த விவசாயக் கடன்களை தள்ளுபடி செய்வதால் ஏற்படும் செலவினத்தை தாட்கோ நிறுவனத்திற்கு கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது. இதற்கு தேவையான நிதியொதுக்கம் 2008–09ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

> “ 2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் 01. ஆதிதிராவிடர் நலன் 800 ஏனைய செலவு I திட்டத்தில் சேராதது – BL – என்எஸ்எப்டிசி திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் வகுப்பின் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட வேளாண்மை கடன் தொகை தள்ளுபடி செய்த வகையில் தாட்கோ நிறுவனத்திற்கு உதவி தொகை அளித்தல் 09 உதவித் தொகை 09 ஏனையவை”.
> (துதொகு எண் 2225 01 800 BL 0998)

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட பணத்தை, ஆணையர், ஆதிதிராவிடர் நலன் அவர்கள், தாட்கோ மேலாண்மை இயக்குநரின் தன்வைப்பு கணக்கிற்கு காசோலை/வரைவோலை ஆக வழங்க அனுமதிக்கப்படுகிறார்.

5. தாட்கோ நிறுவனம் மூலமாக விவசாயக் கடன்பெற்ற ஆதிதிராவிடர்களின் விவசாயக் கடன்கள் முழுவதும் தள்ளுபடி செய்யப்படுவதால் விவசாயிகளிடம் அந்த கடனுக்கான வசூல் நடவடிக்கை மேற்கொள்ளக்கூடாது எனவும் அரசு ஆணையிடுகிறது. இந்த அரசாணையை உடனடியாக நடைமுறைப்படுத்த தாட்கோ, மேலாண்மை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

4. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.72048/ஆதிபந/2008 நாள்.20.11.2008 ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

வ. கனகராஜ்,
அரசு செயலர்.

பெறுநர்
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, திருமங்கலம், சென்னை 101.
ஆணையர், ஆதிதிராவிடர் நலம், சென்னை.5.
ஆணையர், பழங்குடியினர் நலம், சென்னை5.
சம்பளக்கணக்கு அலுவலர் (கிழக்கு) சென்னை 5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்கள்.
அனைத்து மாவட்ட மேலாளர்கள், தாட்கோ.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை 18.
மாநில கணக்காய்வுத் தலைவர் (துணிக்கை 1) சென்னை 35.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை 6.
தேசிய ஆதிதிராவிடர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகம், நியூடெல்லி 110092.

**நகல்:–**
முதலமைச்சரின் தனிச் செயலர், சென்னை.9.
ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சரின் சிறப்பு நிலை நேர்முக உதவியாளர், சென்னை.9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளரின் தனிச்செயலர். சென்னை.9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(அநமு.1,ஆதிந.5,ஆதிந.8)துறை, சென்னை.9.
நிதித்(ஆதி(ம)பந)துறை, சென்னை.9.

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்.